

# நம்பிக்கையினால் ஊக்கப்படுத்தப்படுதல்

பாடம் 7 மே 18, 2024


"அக்காலத்திலே: இதோ, இவரே நம்முடைய தேவன்; இவருக்காகக்
காத்திருந்தோம், இவர் நம்மை இரட்சிப்பார்; இவரே கர்த்தர்,
இவருக்காகக் காத்திருந்தோம்; இவருடைய இரட்சிப்பினால்
களிகூர்ந்து மகிழுவோம் என்று சொல்லப்படும்." (ஏசாயா 25:9)




தீர்க்கதரிசன நிகழ்வுகள் நிறைவேறுகையில், உலகெங்கிலும் உள்ள மக்கள் இயேசுவின் இரண்டாம் வருகையைப் பற்றி ஆராய்ந்து பிரசங்கிக்க தொடங்கினர்.

அவர்களில் ஜெர்மனியை சேர்ந்த ஜோகான் ஆல்பரட் பென்ஜல் (1687-1752); சிலியை சேர்ந்த மேனுயல் லகூன்சா (1731-1801); வட அமெரிக்காவை சேர்ந்த வில்லியம் மில்லர் (1782-1861); மற்றும் ஜோசப் உல்ப் (1821-1845), இவர் நற்செய்தியை ஆப்ரிக்கா, எகிப்து, அப்சினியா, ஆசியா, பாலஸ்தீனம், சீரியா, பெர்சியா, உஸ்பெகிஸ்தான் மற்றும் இந்தியாவிற்கு எடுத்து சென்றவர்.

அவர்கள், மற்றும் மற்றவர்கள் ஏற்கனவே எழுதியிருக்கிறார்கள், அதே முடிவுக்கு வந்திருக்கிறார்கள்: 19ஆம் நுற்றாண்டின் நடுவில் இயேசு வருவார் என்பதே!

**இரண்டாம் வருகை :**

- பாக்கியமான நம்பிக்கை.
- இயேசு எப்படி வருவார்?


**வில்லியம் மில்லர்:**

- வேதாகமத்தை எவ்வாறு அர்த்தப்படுத்துவது.
- தீர்க்கதரிசன காலம்.
- 2300 இராப்பகல் தீர்க்கதரிசனம்.


இரண்டாம்
வருகை

# பாக்கியமான நம்பிக்கை

"நாம் நம்பியிருக்கிற ஆனந்த பாக்கியத்துக்கும், மகா தேவனும் நமது இரட்சகருமாகிய இயேசுகிறிஸ்துவினுடைய மகிமையின் பிரசன்னமாகுதலுக்கும் எதிர்பார்த்துக்கொண்டிருக்கும்படி நமக்குப்போதிக்கிறது." (தீத்து 2:13)



இயேசு மீண்டும் வருவதாக வாக்களித்ததால் (யோ. 14:1-3), இன்று வரையுள்ள விசுவாசிகளுக்கு அது பாக்கியமான நம்பிக்கையாக இருக்கிறது (தீத்து 2:13).

இந்த நம்பிக்கை ரோமன் கத்தோலிக்க திருச்சபை மற்றும் ஆர்தடாக்ஸ் திருச்சபை, இவை இரண்டிலும் பிரதிபலித்தது; ஆங்கலிக்கன் திருச்சபையிலும் இது போதிக்கப்பட்டது; லுத்தர், கால்வின் மற்றும் மற்ற சீர்திருத்தவாதிகளும் போதித்தார்கள்.



எது இயேசுவின் இரண்டாம் வருகையை ஆவலுடன் எதிர்பார்க்கப்பட்ட நிகழ்வாக அமைக்கிறது?



வியாதி, பாடுகள், மற்றும் மரணம் போன்ற காரியங்களின் முடிவு



வறுமை, அநீதி மற்றும் ஒடுக்கப்படுதலின் முடிவு



சண்டை, போராட்டங்கள் மற்றும் யுத்தங்களின் முடிவு



அமைதி, மகிழ்ச்சி மற்றும் தேவனுடனான ஐக்கியம் ஆகியவற்றின் கதவுகள் உலகத்திற்கு திறக்கப்படுதல்

# இயேசு எப்படி வருவார்?

"மின்னல் கிழக்கிலிருந்து தோன்றி மேற்குவரைக்கும் பிரகாசிக்கிறதுபோல, மனுஷகுமாரனுடைய வருகையும் இருக்கும்."
(மத்தேயு 24:27)

19ஆம் நூற்றாண்டில், இயேசு சமாதானமான ஆயிரம் ஆண்டுகள் (ப்ரிமில்லியனிசம்) நிறுவுவார், அல்லது இரண்டாம் வருகைக்கு முன் சமாதானமான ஆயிரம் ஆண்டுகள் (போஸ்ட்மில்லியனிசம்) இருக்கும் என்று இரண்டாம் வருகையின் கோட்பாட்டை புரட்டஸ்டண்ட்கள் சிதைத்தனர். என்றாலும், சீர்திருத்தவாதிகள் மில்லினியம்(சமாதானமான ஆயிரம் ஆண்டுகள்) இரண்டாம் வருகைக்கு பின் இருக்கும் என்று போதித்ததோடு மட்டுமில்லால், இரண்டாம் வருகை பின்வருமாறு இருக்கும் என்றனர்:



***உண்மையாகவே.*** "மெய்யாகவே நான் சீக்கிரமாய் வருகிறேன்" (வெளி. 22:20)



***பார்க்கும்படியாக.*** "கண்கள் யாவும் அவரைக் காணும்" (வெளி. 1:7; மத். 24:27)



***சத்தமாக.*** "ஆரவாரத்தோடும், பிரதான தூதனுடைய சத்தத்தோடும், தேவ எக்காளத்தோடும் வானத்திலிருந்து இறங்கிவருவார்;" (1தெச. 4:16; 1கொரி. 15:52)



***மகிமையாக.*** கிறிஸ்துவுக்குள் மரித்தோர் எழுந்திருப்பார்கள், உயிரோடிக்கும் பரிசுத்தவான்கள் மறுரூபமாவார்கள், கர்த்தரோடு இருவரும் பறந்து செல்வார்கள்(1தெச. 4:13-18; 1கொரி. 15:51-55)




வில்லியம்
மில்லர்

# வேதாகமத்தை எவ்வாறு அர்த்தப்படுத்துவது

"கற்பனையின்மேல் கற்பனையும், கற்பனையின்மேல் கற்பனையும், பிரமாணத்தின்மேல் பிரமாணமும், பிரமாணத்தின்மேல் பிரமாணமும், இங்கே கொஞ்சமும் அங்கே கொஞ்சமுமாம் என்கிறார்கள்." (ஏசாயா 28:10)

ஏசாயாவின் வார்த்தைகளின் அடிப்படையில் (ஏசா . 28:9-10), வில்லியம் மில்லர் வேதாகமத்தை தனது சொந்த மொழிபெயர்ப்பாளராக மாற்ற முடிவு செய்தார். ஆதியாமத்திலிருந்து, அவர் ஒவ்வொரு வேதவாக்கியத்தையும் படித்தார். அதனுடைய அர்த்தம் தெளிவாக இல்லாதிருந்தால், அவர் அதற்கான அர்த்தத்தை இன்னொரு வசனத்தில் தேடுவார். இந்த வகையில், அவருக்கு முன்பாக வேதாகமம் திறக்கப்படும்வரை பரிசுத்த ஆவியானவர் அவரை ஒளிரசெய்தார்.

தீர்க்கதரிசன பகுதிகளுக்கு அவர் வந்தபோது, அதே ஒரு கொள்கையை அங்கேயும் பயன்படுத்தலாம் என்று கண்டுபிடித்தார்:





இந்த கொள்கைகளைப் பயன்படுத்தி, மில்லர் தனது கண்டுபிடிப்புகளால் ஆச்சரியப்பட்டார்



மிருகம் இராஜ்யங்களை குறிக்கும் (தானி. 7:17, 23)





காற்று அழிவைக் குறிக்கும் (எரே. 49:36)





தண்ணீர் ஜனக்கூட்டத்தைக் குறிக்கும் (வெளி. 17:15)






ஸ்திரி சபையைக் குறிக்கும் (எஸ். 23:4; 2கொரி. 11:2)





நாட்கள் ஆண்டுகளைக் குறிக்கும் (எண். 14:34; எசேக். 4:6)




# தீர்க்கதரிசன காலம்



"அவன் என்னை நோக்கி: இரண்டாயிரத்து முந்நூறு இராப்பகல் செல்லும்வரைக்கும் இருக்கும்; பின்பு பரிசுத்தஸ்தலம் சுத்திகரிக்கப்படும் என்றான்." (தானியேல் 8:14)

இதை எண்ணியவராக, மில்லரின் காலத்தில், பூமியை ஆசரிப்புக் கூடாரமாக நினைத்து, அதன் சுத்திகரிப்புக் குறித்த தீர்க்கதரிசனமாக கண்டறிந்து (தானி . 8:14) இயேசுவின் இரண்டாம் வருகையின் நேரத்தை குறித்தார்.

தரிசனத்தின் அனைத்து விவரங்களையும் காப்ரியேல் தானியேலுக்கு விளக்கியதாக அவர் குறிப்பிட்டார்:





ஆட்டுக்கடா = மேதிய-பெர்சியா (தானி. 8:20)


வெள்ளாட்டுக்கடா = க்ரீஸ் (தானி. 8:21a)


முறிந்துபோன கொம்பு = அலெக்சாண்டரும் அவருக்கு பின்வந்தவர்களும் (தானி. 8:21-22)


சின்னக்கொம்பு = ரோம், அரசியல் மற்றும் மத வல்லமை (தானி. 8:23-25)


என்றாலும், 2300 நாட்கள் விளக்கப்படாமல் அப்படியே இருந்தது (தானி. 8:26-27).

ஒரு வருடம் கழித்து காப்ரியேல் தூதனை அனுப்பி தானியேலுக்கு அந்த காரியத்தை விளக்கினார் (தானி. 9:21-23). ஒரு குறிப்பிட்ட அல்லது "துண்டிக்கப்பட்ட காலம்" இருப்பதாக விளக்கினார், "எருசலேம் மீண்டும் புதுப்பிக்கப்பட்டு கட்டப்படுவதற்கு ஆணை பிறப்பிக்கப்படும் காலம்முதல்" துவங்கும் என்று கூறினார் (தானி. 9:24-25 ). அந்த ஆணையை மில்லர் கண்டுபிடித்தாரானால், 2300 ஆண்டுகளின் துவக்கத்தை கண்டறிவார்.

# 2300 இராப்பகல் தீர்க்கதரிசனம்

**"பின்னும் நதிக்கு அப்புறத்திலிருந்து உன் தேவனுடைய நியாயப்பிரமாணங்களை அறிந்த சகல ஜனங்களையும் நியாயம் விசாரிக்கத்தக்க துரைகளையும், நியாயாதிபதிகளையும், எஸ்றாவாகிய நீ உன்னிலுள்ள உன் தேவனுடைய ஞானத்தின்படியே ஏற்படுத்துவாயாக; அந்தப் பிரமாணங்களை அறியாதவர்களுக்கு அவைகளை உபதேசிக்கவுங்கடவாய்." (எஸ்றா 7:25)**





பெர்சியாவின் இராஜாவாகிய அர்தசஷ்டாவின் 7ஆம் வருடத்தில், எஸ்றா எருசலேமுக்கு செல்லவும், நகரத்தின் மறுசீரமைப்பை முடிக்க போதுமான அரசியல் சுயாட்சியை பெறவும் உத்தரவு பிறப்பிக்கப்பட்டது (எஸ்றா 7:7, 11-14, 20-21, 24- 25). அந்த வருடம் கிமு 457.

70 வார தீர்க்கதரிசனம் குறிப்பதுபோல, எருசலேம் முற்றிலுமாக கட்டப்படுவதற்கு 49 வருடங்கள் ஆனது, மேசியா வருவதற்கும் 434 வருடங்களுக்கு மேல ஆனது (தானி. 9:25). இந்த கணக்கு இயேசுவின் ஞானஸ்நானத்தை கிபி 27லும், 70வாரத்தின் முடிவை கிபி 34லும் வைக்கிறது.

தீர்க்கதரிசன நாட்காட்டியின் ஒவ்வொரு துண்டுகளையும் ஒன்றிணைத்து, இயேசுவின் இரண்டாம் வருகை 1843ல் இருக்கும் என்று மில்லர் ஒரு முடிவுக்கு வந்தார்.

வரலாற்றில் "0" வருடம் கிடையாது என்பதை கண்டறிந்து அதை இந்த கணக்கில் சேர்த்த போது, இயேசு 1844ல் வருவார் என்று தீர்மானிக்கப்பட்டது.


DANIEL'S VISIONS.

ILLUSTRATIONS OF MILLER'S VIEWS

END OF THE WORLD

1843.

JOHN'S VISIONS.

# 2300 இராப்பகல் தீர்க்கதரிசனம்

"உன் ஜனத்தின்மேலும் உன் பரிசுத்த நகரத்தின்மேலும் எழுபது வாரங்கள் செல்லும்படி குறிக்கப்பட்டிருக்கிறது." (தானியேல் 9:24)

"இரண்டாயிரத்து முந்நூறு இராப்பகல் செல்லும்வரைக்கும் இருக்கும்; பின்பு பரிசுத்தஸ்தலம் சுத்திகரிக்கப்படும்."



“வேதம் வெளிப்படுத்தியிருக்கிற மிக முக்கியமான மற்றும் மிக மகிமையான உண்மைகளில் ஒன்று மீட்பின் வேலையை நிறைவு செய்ய வரும் இயேசுவின் இரண்டாம் வருகையே. தேவனுடைய யாத்ரீக ஜனங்களுக்கு, “மரண இருளின் பள்ளதாக்கு பகுதியில்”, தங்குவதற்கு இவ்வளவு காலம் எஞ்சியுள்ளது, விலைமதிப்பற்ற, மகிழ்ச்சியை-தூண்டும் நம்பிக்கை, அவர் வருகையின் வாக்குத்தத்ததில் கொடுக்கப்பட்டிருக்கிறது, அவரே “உயிர்த்தெழுதலும் ஜீவனுமாயிருக்கிறவர்,” “இழந்துபோனவர்களை மீண்டும் வீடு சேர்க்க வருவார்.” இரண்டாம் வருகையின் கோட்பாடு புனிதமான வேதவாக்கியங்களின் முக்கியமான குறிப்பாயிருக்கிறது.”

எலன் ஜி உவைட் (மாபெரும் ஆன்மீக போராட்டம், பக். 299)